**<u>அசல் வழக்கு எண்.51/2017</u>**

**<u>தேதி: 17.10.2023.</u>**

**<u>பி.வா.சா.2:</u> ( திருமதி கீதா க/பெ. சுப்பிரமணி )**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**வாதி எனக்கு அண்ணன். நான், ரமணி, பானு, உஷா ஆகியோர் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி எங்கு வசிக்கிறார் என்றால் மேலதாங்கல் கிராமத்தில் வசிக்கிறார். 2ம் பிரதிவாதி எங்கு வசிக்கிறார் என்றால் செய்யாரில் வசிக்கிறார். 3ம் பிரதிவாதி எங்கு வசிக்கிறார் என்றால் அவலூர்பேட்டையில் வசிக்கிறார். நான் மேல்மருவத்தூர் இரும்புலி கிராமத்தில் வசிக்கிறேன்.**

**1 முதல் 4 பிரதிவாதிகளான நாங்கள் தாவா சொத்தில் அனுபவித்தில் இருக்கிறோமா என்றால் அனுபவத்தில் தான் இருக்கிறோம். நீங்கள் இருக்கிறீர்களா என்றால் வாடகைக்கு விட்டுள்ளோம். நாங்கள் நான்கு பேரும் வாடகைக்கு விட்டு வெளியில் உள்ளோம் என்றால் 2ம் பிரதிவாதி பானு அங்கு தான் உள்ளார். 5,6 பிரதிவாதிகள் பாக்கியலட்சுமி வசந்தி எங்களுக்கு உறவினர்கள் இல்லை என்றால் சரி தான்.**

**இந்த வழக்கில் வாதி, 1 முதல் 4 பிரதிவாதிகள் நாங்கள் உறவினர்கள் என்பதிலும், தாவா சொத்து என் தாயாரின் சொத்து என்பதிலும் ஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனை இல்லை. இவ்வழக்கில் நாங்கள் 1 முதல் 4 பிரதிவாதிகள் பதில் போட்டுள்ளோமா என்றால் போட்டுள்ளோம். 1 முதல் 4 பிரதிவாதிகளாகிய நாங்கள் பதில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், 5,6 பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலை தான் நாங்கள் ஏற்றுக்கொண்டோம் என்றாலும் சரியல்ல.**

**தாவா சொத்துகள் எங்குள்ளது என்றால் செய்யாரில் உள்ளது. தாவா சொத்துக்கள் என் தாயார் ராணிக்கு 10.11.2006ல் பாகப்பிரிவினை மூலமாக என்**

தாயாருக்கு வந்த சொத்துக்கள் என்றால் சரி தான். என் தாயார் எப்போது இறந்தார் என்றால் 2009ல் இறந்தார். என் தாயார் இறக்கும் வரை தாவா சொத்துக்கள் சம்பந்தமாக எந்தவிதமான ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்றால் ஏற்படுத்தவில்லை.

என் தாயார் ராணியின் வாரிசு சான்றிதழை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி தான். வாரிசு சான்றில் எங்கள் ஐந்து பேரும் காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான். ஆனால் என் அம்மாவுக்கு என் அண்ணன் ராஜேந்திரன் இறந்துவிட்டார். அவருக்கு மனைவி, குழந்தைகள் உள்ளனர். வாரிசு சான்று குறித்த ஆட்சேபனையை நாங்கள் வருவாய் துறையிடம் தெரிவித்தோமா என்றால் எங்களுக்கு வாரிசு சான்று குறித்த அறிக்கை இதுவரையில் எங்களுக்கு வரவில்லை.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அப்போதும் எங்களுக்கு அதுகுறித்து அறிவிக்கவில்லை என்பதால் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது குறித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் வழக்கு தாக்கல் செய்யும்போதே தெரிந்துக்கொண்டேன். வாதி இவ்வழக்கை என் தாயார் சொத்தில் 1/5 பாகம் கேட்டு தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி தான்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2ஆனது வாரிசு சான்று என்றால் தவறான வாரிசு சான்று. என் தாயார் இறந்தபிறகு அவரது சொத்தை குறித்து என்ன செய்தோம் என்றால் நாங்கள் எங்கள் அம்மாவின் சொத்தை ரமணி, பானு, உஷா, கீதா ஆகியோர் நால்வரும் பாகப்பிரிவினை செய்து பிரித்துக்கொண்டோம். அதில் நானும் உஷாவும் எங்களுடைய பாகத்தை விற்றுவிட்டோம். வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை பத்திரத்தில் அம்மாவின் ஆண் வாரிசுகளை சேர்க்காமல் விட்டுவிட்டோம் என்றால் சரி தான். காரணம், என் அப்பா அம்மா உயிருடன்

இருக்கும்போது திருமண செலவு மற்றும் குடும்ப செலவிற்கான ரூ.4,00,000/-த்தை குறித்து பேசும்போது வாதி சொத்தும் வேண்டாம், கடனும் வேண்டாம் என்று சொல்லிவிட்டு, அப்பா சொத்து திருவண்ணாமலை மாவட்டம் அரும்பாக்கத்தில் உள்ள சொத்தே போதும் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அதனால் பாகப்பிரிவினையை வாதியை சேர்க்கவில்லை. அண்ணன் ஒருவர் இறந்துவிட்டாலும் அவருடைய குடும்பம் எங்கள் பராமரிப்பில் இருப்பதால் அவர்களையும் சேர்க்கவில்லை.

என்னுடைய முதல் விசாரணை பிரமாணப்பத்திரத்தில் மேற்படி சங்கதிகளை சொல்லவில்லை என்றால் முதலில் சொல்லவில்லை என்று சாட்சியம் அளித்துவிட்டு பிறகு சொல்லியுள்ளதாக சாட்சி சாட்சியம் அளிக்கிறார். பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்கண்ட சங்கதிகளை சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. திருமண கடன் மற்றும்குடும்ப கடனாக ரூ.4,00,000/-ம் இருந்ததற்கு ஆதாரம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் ஆதாரம் உள்ளது.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional District Judge,
Fast Track Court, Arani.